தெமாசெக் ஆய்வு 2026 சிறப்பம்சங்கள்

மாறிவரும் உலகில் ஆற்றல்மிகு அணுகுமுறை

உலக அரசியல், தொழில்நுட்பம், எரிசக்தி, தொழில்நிறுவனம் அனைத்திலும் மாற்றங்கள் ஒருங்கிணையும் காலகட்டத்தில், நாங்கள் ஆற்றல்மிகு அணுகுமுறையுடன் முன்னேறிச் செல்வோம் — அதனால் ஒவ்வொரு *தலைமுறையும்* செழிப்படையும்

செயல்திறன்

நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு பத்தாண்டுகளில் இரட்டிப்பானது

ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில் சீரான கூட்டிணைப்பு — நீண்ட காலத்தில் நீடித்து நிலைக்கவல்ல நல்ஆதாயம் ஈட்டித்தரும் முதலீட்டுப் பட்டியல்



— நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு, பட்டியலிடாத முதலீடுகளை ஏட்டு மதிப்பிலும்[2] பட்டியலிட்ட முதலீடுகளை சந்தை விலைகளிலும் மதிப்பிடுவதன் அடிப்படையிலானது

நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு (NPV)

S$518பி*[3]

கடந்த ஆண்டு S$49பி அதிகரிப்பு

கடந்த பத்தாண்டுகளில் S$256பி அதிகரிப்பு

முதலீட்டு தொகுப்பின் மதிப்பு, இடர்நிலை, ஏற்ற இறக்கங்கள் அனைத்தையும் அதிகமாகப் பிரதிநிதிப்பதற்காக சந்தைக்கேற்ப மதிப்பிடும் (MTM) அடிப்படைக்கு முழுமையாக மாறிய அதே வேளையில், மேம்பட்ட தீர்மானங்கள் எடுப்பதற்கும் சக உலக முதலீட்டாளர்களுக்கு இணையான நிலையில் இருப்பதற்கும் ஆதரவளிக்கிறது

20-ஆண்டு 6.8%[4,5,6] | 10-ஆண்டு 7.1%[4,7] S$ பங்குதாரருக்குரிய மொத்த ஆதாயம் (TSR)

சந்தைச் சுழல்களுக்கு மத்தியில் செயல்படக்கூடிய எங்கள் முதலீட்டுப் பட்டியலின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது

S$51பி முதலீடு

அமைப்புமுறை போக்குகளாலும் நீண்டகால நம்பிக்கையாலும் நிர்ணயிக்கப்பட்ட வாய்ப்புகளில் முதலீடு செய்யப்படுகிறது

S$31பி முதலெடுப்பு

முதலீட்டுப் பட்டியலின் சாதகநிலையை மேம்படுத்தவும், வளர்ந்துவரும் துறைகளுக்கு மாறவும் மூலதனம் மறுசுழற்சி செய்யப்படுகிறது

மீள்திறன் மற்றும் உத்திபூர்வத் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட முதலீட்டுப் பட்டியல்

சந்தைகளிலும் சுழல்களிலும் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள, சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டு உலகெங்கிலும் முதலீடு செய்யப்படுகிறது





சந்தை மற்றும் அந்நியச் செலாவணி ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில் வலுவான அடிப்படைச் செயல்திறன்

அந்நியச் செலாவணி ஏற்ற இறக்கம் நிலையில்லாமல் இருக்கும் காலகட்டங்களில், நிலையான அந்நியச் செலாவணியின் அடிப்படையில் ஆதாயத்தை அறிவிப்பது அடிப்படைச் செயல்திறனைத் தெளிவாகக் காட்டக்கூடும். நிலையான அந்நியச் செலாவணி அடிப்படையில், எங்களது ஓராண்டுகால TSR 12.9% ஆக இருந்திருக்கும். ஒப்புநோக்க SGD டாலரில் 10.5% மற்றும் USD டாலரில் 14.8% ஆக இருந்தன.



முதலீட்டுப் பட்டியலின் மூல பலம் அதன் பணமாக்க ஆற்றல்

நீக்குப்போக்குத் தன்மையைக் கட்டிக்காக்கவும், கட்டொழுங்குமிக்க மூலதன மறுசுழற்சிக்குத் துணைபுரியவும், பட்டியலிட்ட மற்றும் பட்டியலிடாத முதலீட்டு வெளிப்பாடுகள் சமநிலையில் கையாளப்படுகின்றன

மீள்திறனை வளர்த்து, நம்பிக்கையுடன் முதலீடு

சிறப்பாகச் செய்வோம்

நீடித்து நிலைக்கக்கூடிய நல்ல ஆதாயம் ஈட்டுவதற்காக, எங்கள் முதலீட்டுப் பட்டியல் முனைப்புடன் நிர்வகிக்கப்பட்டு, மூலதனம் கட்டொழுங்குடன் ஒதுக்கீடு செய்யப்படுகிறது

முதலீட்டுப் பட்டியல் வெளிப்பாடு (%)*

43 — சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட தெமாசெக் முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்கள் (TPC)

~S$200பி மொத்த வருவாய்

>160,000 உள்ளூரில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்

>240,000 வெளிநாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்

எங்கள் முதலீட்டுப் பட்டியலின் இந்தத் திடமிக்க நிறுவனங்கள், நீண்ட காலத்தில் நிலையான, நீடித்து நிலைக்கவல்ல ஆதாயம் ஈட்டித்தருகின்றன. TPC நிறுவனங்கள் கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு **8.1%**[11] ஆதாயம் ஈட்டித்தந்தன.

எங்களது ஆகப்பெரிய தெமாசெக் முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்கள்:

CapitaLand, DBS, Keppel, mapletree, PSA, sats, Seatrium, sembcorp, Singapore Airlines, Singtel, SPgroup, ST Engineering

மதிப்பின் உருவாக்கத்தையும் வலுவான செயல்திறனையும் தூண்டுகிறோம்

- செயலாற்றல்மிக்க நிர்வாகச் சபைகளும் நிர்வாகமும்
- உத்திபூர்வ நிலைமாற்றம்
- தலைசிறந்த நடைமுறைகள்
- துரிதமான செயற்கை நுண்ணறிவு நிலைமாற்றம்
- நீடித்த நிலைத்தன்மை ஒருங்கிணைப்பு
- மூலதன அமைப்புமுறை நற்பயன்பாடு
- மூலதனச் சந்தைகள் திட்டமைப்பு

38 — உலகளாவிய நேரடி முதலீடுகள் (GDI)

அமைப்புமுறை போக்குகளை வழிகாட்டியாய்ப் பயன்படுத்தி, குறிவைக்கப்படும் துறைகளிலும் சந்தைகளிலும் மீள்திறனுடன் ஆதாயத்தைப் பெருக்கித்தரும் உயர் வளர்ச்சி வாய்ப்புகளில் முதலீடு செய்வோம். GDI முதலீடுகள் கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு **7.6%**[11] ஆதாயம் ஈட்டித்தந்தன.

செயற்கை நுண்ணறிவு

மதிப்புவாய்ந்த செயற்கை நுண்ணறிவுத் துறையில் நம்பிக்கையளிக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்வோம்[12]

நடப்பு முதலீட்டுப் பட்டியலில் **6%**[13]

இலக்கு: 31 மார்ச் 2031 தேதிக்குள் அதிகபட்சம் **15%**[13] வரையிலான உயர்வு

மூல-மேம்பட்ட உள்கட்டமைப்பு

உள்கட்டமைப்புச் சொத்துகளில் முதலீடு செய்வதன்மூலம் மீள்திறனும் பணமாக்க ஆற்றலும் வளர்க்கப்படும்

நடப்பு முதலீட்டுப் பட்டியலில் **1%**[13]

இலக்கு: 31 மார்ச் 2031 தேதிக்குள் **5%**[13] உயர்வு

தனிப்பட்ட கடன்

நிலையான ஆதாயம், வலுவான ரொக்கப் புழக்கம், கட்டொழுங்கான அமைப்புமுறைகள் ஆகியவற்றின்மூலம் திட்டமிட்ட வளர்ச்சி அடைவோம்

நடப்பு முதலீட்டுப் பட்டியலில் **2%**

இலக்கு: 31 மார்ச் 2031 தேதிக்குள் **5%** உயர்வு

இலக்கு: 31 மார்ச் 2031 அடைவதற்குள் இந்தத் துறைகளில் **25%**[13] வரை முதலீட்டுப் பட்டியல் வெளிப்பாடு

அமைப்புமுறை போக்குகளுக்கும் வட்டார உத்திகளுக்கும் ஒத்திசைவான துறைகள்:

• விண்வெளித்துறை மற்றும் தற்காப்பு • பயனீட்டுத்துறை • எரிசக்தி நிலைமாற்றம் • நிதிச் சேவைகள் • உயிரறிவியல் • தொழில்நுட்பம்

19 — பங்காளித்துவங்கள், நிதிகள், சொத்து நிர்வாக நிறுவனங்கள் (PFA)

எங்கள் மூலதனத்தைப் பெருக்கவும், நிபுணத்துவ உத்திகளை அடையவும், மாற்றுச் சொத்து பட்டியல் வடிவமைப்பதற்கான கட்டமைப்பு. PFA-கள் கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு **7.7%**[11] ஆதாயம் ஈட்டித்தந்தன.

பங்காளித்துவங்களும் நிதிகளும்

Brookfield, EQT, Global Infrastructure Partners (a part of BlackRock), KKR, LeapFrog Investments, TPG

சொத்து நிர்வாக நிறுவனங்கள்

SEVIORA, Azalea, Fullerton Fund Management, Innoven Capital, Seatown, Seviora Capital[14], 65 Equity Partners, Aranda Principal Strategies, Decarbonization Partners (BlackRock | Temasek), Truelight Capital

சரியானதைச் செய்வோம்

தெளிவாகச் சிந்தித்துச் செயல்பட்டு, மீள்திறனை வளர்ப்போம்

எங்கள் முதலீட்டுப் பட்டியல், மக்கள், பூமி அனைத்தும் செழிப்படைய வலுவான அடிப்படைகளை அடித்தளமாகக் கொண்டு, முன்னோக்குடன் இயங்கும் அமைப்பைச் சாத்தியப்படுத்துவோம்

அமைப்புமுறை, திறன், ஆற்றல்

தெமாசெக்கிலும் எங்களுக்குச் சொந்தமான தொழில்நிறுவனங்களிலும் நீண்டகால மதிப்பைப் பெருக்கும் முக்கிய காரணிகளான திறனையும் ஆற்றலையும் பேணி வளர்ப்போம்



செயற்கை நுண்ணறிவு (AI) இயலாற்றல்

எங்கள் குழுக்களும் சூழலமைப்பும் செயற்கை நுண்ணறிவைச் சாதகமாக்கிக்கொள்ள கூடிய ஆற்றல் அளிப்பதற்காக மக்களை மையப்படுத்தி, மக்களால் வழிநடத்தப்படும் அணுகுமுறையைக் கையாள்வோம்

நீடித்த நிலைத்தன்மையே மையம்

அமைப்பு மற்றும் முதலீட்டுப் பட்டியலின் மீள்திறனை வலுப்படுத்தி, 2050-ஆம் ஆண்டுக்குள் கரியமில வாயுவற்ற நிலையை அடையும் குறிக்கோளில் தொடர்ந்து உறுதியாக இருப்போம்

நம் சமூகத்தில் திருப்பத்தை ஏற்படுத்துகிறோம்

நல்லன செய்வோம்

2003 முதல், நாங்கள் எங்களது இடர் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவுக்கு மேற்பட்ட நிகர லாப ஆதாயங்களின் ஒரு பகுதியை சமூக அன்பளிப்புகளுக்காக ஒதுக்கி வருகிறோம். மக்களை இணைப்பது, சமூகங்களைச் சீர்தூக்கி விடுவது, நம் பூமியைப் பாதுகாப்பது, ஆற்றல்களை மேம்படுத்துவது ஆகிய எங்களது சமூக இலக்குகளை அடைவதற்காக, இந்த அன்பளிப்புகளில் பெரும்பகுதி தெமாசெக் அறநிதிக்கு (TT) நன்கொடையாக வழங்கப்படுகின்றன. ஆற்றலை வளர்க்கவும், பங்காளித்துவங்களை அமைக்கவும், மூலதனத்தைத் திரட்டவும், தீர்வுகளை அடையவும், தெமாசெக்கின் அடிப்படை சமூகப் பொறுப்பாண்மை அமைப்பான தெமாசெக் அறநிதி கூட்டமைப்பின் பலதரப்பட்ட ஆற்றல்களை தெமாசெக் அறநிதி பயன்படுத்துகிறது. **எங்களது மூலதனம், கட்டமைப்பு, உள்ளாய்வுகள் ஆகியவற்றின் பலனை அதிகப்படுத்த** நாங்கள் பொது, தனியார், மக்கள் துறைகளில் உள்ள எங்கள் பங்காளிகளுக்கும் நேரடியாக நன்கொடை வழங்குகிறோம்.

வாய்ப்புகளை உருவாக்கி, நற்பலனை உண்டாக்குகிறோம்

தெமாசெக்கின் “T-Ignite” நிதி, இயலாமை உள்ளவர்களுக்காக சிங்கப்பூரில் முதல்முறையாக “பாரிஸ்டா” பயிற்சிக் கழகத்தை அமைக்க “Foreword Coffee” நிறுவனத்திற்கு ஆதரவளித்தது.

பார்க்க ஸ்கேன் செய்யவும்

பராமரிப்பை மேம்படுத்தி, வாழ்க்கையை மாற்றுகிறோம்

தெமாசெக் அறநிறுவனம், மனநல மருத்துவமனையுடன் கூட்டிணைந்து, சிங்கப்பூரில் வழக்கமான சிகிச்சையால் குணப்படுத்த முடியாத மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூளையில் துல்லியத் தூண்டுதல் சிகிச்சை அளிக்கும் முன்னோட்டச் சோதனைக்கு ஆதரவளித்தது.

பார்க்க ஸ்கேன் செய்யவும்

* வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, அனைத்து நிதித் தகவல்களும் 31 மார்ச் 2026 நிலவரப்படி சிங்கப்பூர் டாலரில் படைக்கப்பட்டுள்ளன. 31 மார்ச் 2016 முடிவுற்ற நிதி ஆண்டிலிருந்து தொடங்கும் காலகட்டத்தின் முதலீட்டுப் பட்டியல் புள்ளிவிவரங்கள், எங்களது பட்டியலிடாத முதலீடுகளை மதிப்பிடுவதற்காக MTM அடிப்படையில் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எங்களது முந்திய அறிவிப்பு முறை, பட்டியலிடாத முதலீடுகளை ஏட்டு மதிப்பில் மதிப்பிட்டது. சந்தை விலையில் மதிப்பிடப்படும் பட்டியலிட்ட முதலீடுகள், ஏற்கனவே சந்தைக்கேற்ப மதிப்பிடப்படும் பட்டியலிடாத நிதிகள் மற்றும் துணை முதலீடுகள் ஆகியவற்றின் மதிப்பீட்டு அடிப்படையில் மாற்றமில்லை.

1 31 மார்ச் நிலவரப்படி.

2 ஏட்டு மதிப்பில் மதிப்பிடப்பட்ட பட்டியலிடப்படாத முதலீடுகள் என்பது, தெமாசெக்கின் முதலீட்டுச் செலவு, முதலீடு செய்யப்படும் நிறுவனத்தின் லாபம் அல்லது நட்டத்தில் எங்கள் பங்கு, மற்ற பங்குமுதல் காப்புநிதிகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை, மதிப்புக்குறைப்பு (இருந்தால்) கழித்துக் கணக்கிடப்படுவதை குறிப்பிடுகிறது.

3 31 மார்ச் 2026 நிலவரப்படி US$401 பில்லியன், €350 பில்லியன், £304 பில்லியன், மற்றும் RMB2.77 ட்ரில்லியனுக்குச் சமமானது.

4 1 மற்றும் 5 ஆண்டு TSR முறையே 10.5% மற்றும் 4.6% (அமெரிக்க டாலரில் முறையே 14.8% மற்றும் 5.4%).

5 31 மார்ச் 2026 முடிவுற்ற நிதி ஆண்டிலிருந்து, முதலீட்டுப் பட்டியலின் 1, 5 மற்றும் 10 ஆண்டுகாலச் செயல்திறன் MTM அடிப்படையில் வெளியிடப்படும். கடந்தகாலப் புள்ளிவிவரக் கட்டுப்பாடுகளின் காரணமாக, 31 மார்ச் 2016 தேதிக்குமுன் MTM மதிப்பீடு கிடையாது. இதனால், MTM அடிப்படையிலான 20 ஆண்டுகால TSR மதிப்பில், பட்டியலிடாத முதலீடுகளை மதிப்பிடும் முறை ஏட்டு மதிப்பிலிருந்து MTM அடிப்படைக்கு மாறியதால் 2016 மார்ச் மாதம் நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பில் ஒருமுறை மட்டும் செய்யப்பட்ட உயர்வு உள்ளடங்குகிறது.

6 20 ஆண்டுகால TSR அமெரிக்க டாலரில் 8.0%.

7 10 ஆண்டுகால TSR அமெரிக்க டாலரில் 7.5%.

8 அடிப்படைச் சொத்துகளின் அடிப்படையிலான பகிர்வு.

9 அந்நியச் செலாவணி வகைப்பாட்டின் அடிப்படையிலான பகிர்வு.

10 பெரும்பாலும் ரொக்கம், ரொக்கச் சமன்கள், மற்றும் 20%-க்குக் குறைவான பங்குள்ள பட்டியலிட்ட சொத்துகள்.

11 அகநிலை ஆதாய விகிதம் என்பது, சிங்கப்பூர் டாலரில், நாங்கள் முதலீடு செய்திருக்கும் முதலீட்டுப் பட்டியலின் பண அளவு மதிப்பிடப்பட்ட ஆதாயத்தைக் குறிக்கிறது. முதலீட்டு ரொக்கப் புழக்கத்தின் காலகட்டத்தையும் அளவையும் இது கணக்கில் கொள்கிறது.

12 எரிசக்தி மற்றும் தரவு மையங்கள், கிளவுட் சேவை நிறுவனங்கள், அடித்தள மாதிரிகள், செயற்கை நுண்ணறிவுச் செயலிகள், மென்பொருள் உள்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

13 சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட எங்களது தெமாசெக் முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்களின் செயற்கை நுண்ணறிவு மற்றும் மூல-மேம்பட்ட உள்கட்டமைப்பு சார்ந்த வெளிப்பாடுகள் உள்ளடங்கவில்லை.

14 “Pavilion Capital” நிறுவனம் “Seviora Capital” நிறுவனத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது.

தெமாசெக் ஆய்வு 2026 முழு அறிக்கையை **temasekreview.com.sg** இணையத்தளத்தில் வாசியுங்கள்

TEMASEK